# CLIMATE CHANGES DRAMA

# கால நிலை மாற்றம் அல்லது மாறும் காலங்கள் நவரச நாடகம்

எழுதியவர் :- சி .குமாரலிங்கம்

By :- S. Kumaraligham

# CLIMATE CHANGES DRAMA

## காலநிலை மாற்றம்
## அல்லது
## மாறும் காலங்கள்
## நவரச நாடகம்

எழுதியவர் :- சி .குமாரலிங்கம்

**Climate Changes :- By :- S. Kumaraligham**

| | | |
|---|---|---|
| **Title** | :- | **Climate Changes**<br>கால நிலை மாற்றம் |
| Author And Publisher | :- | S. Kumaraligham<br>149 – Chemmany Road –<br>Nallur, Jaffna. |
| Printers | :- | Api Printers , Market Road,Kalvijkkadu. |
| Number Of Copies | :- | 300 |
| Date Of Publicton | :- | 27.09. 2016 |
| ISBN | :- | 978 – 955 – 51477 – 8 – 1 |
| Price | :- | 200/= |

## சமர்ப்பணம்

உலகெங்கணும் உள்ள

நூல் நிலையங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்

நூலகர்களுக்கும்

நூலகங்களுக்குப் பெறுமதியான நூல்களை

வழங்குபவர்களுக்கும்

இந்த நூல் சமர்ப்பணம்

## என்னுரை

தற்பொழுது எமது நாட்டில் மூன்று மாவட்டங்களில் கொடிய வறட்சி நிலவுகின்றது. இந்த நிலை ஏன் வந்தது இதை நிவர்த்தி செய்வதற்கு நீண்ட காலத்திட்டம் என்ன? இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்.

இந்த நாடக நூலை வாசித்தால் இந்த கேள்வி களுக்கு விடை கிடைக்கும். இந்த நூலை எழுதுவதற்கு வீட்டுத்தோட்டம் பற்றிய கையேடுகளை தந்த விவசாய உத்தியோகத்தர்களுக்கு எனது நன்றிகள்.

மேலும் சொட்டு நீர்ப்பாசனம், தூறல் நீரப்பாசனம் ஆகியவற்றை காண்பித்து விளக்கம் தந்த விவசாய திணைக்கள உத்தியோகத்தருக்கும் எனது நன்றிகள்.

இவற்றை விட எனக்கு தேவையான நூல்களை தேடி எடுத்து உதவும் நல்லூர் நூலக உத்தியோகத்தருக்கும் எனது நன்றிகள்.

இன்று சுற்றாடல் தினத்தில் இந்நூல் வெளியிடப் படுவது ஒரு சிறப்பு நிகழ்வாகும்.

தனிப்பட்ட முறையிலும் தெருக்களில் நடந்து செல்லும் பொழுதும் இந்நூலில் கூறப்பட்ட விடயங்களை பலருடன் விவாதித்து வருகிறன்?

இன்னும் நான் வெளியிட்ட நூல்களை வாங்கி ஆதரவு தந்தவர்களுக்கு எனது நன்றிகள்.

இத்தாலி நாட்டில் உள்ள துறைமுகங்களுக்குள் பெரிய ஆடம்பர உல்லாச கப்பல்கள் வருவதை அந்த நாடு தடைசெய்துள்ளது.

27.09.2016

## மாறிடும் காலங்கள்
## நாடகம்

எழுதியவர் :- சி.குமாரலிங்கம்.
149 செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### கதாபாத்திரங்கள்

மோகன் :-
வீட்டுத்தலைவர் கூலிவேலை செய்து பிளைப்பவர்.

மோகனா :-
குடும்பத்தலைவி சமூகசேவகி.

மணிவண்ணன் :-
A/L படிக்கும் மாணவன், சமூக உணர்வு கொண்டவன் (மகன்)

பவித்திரா :-
O/L படிக்கும் மாணவி, நிறைய வாசிக்கும் இயல்புடையவள் (மகள்)

# CLIMATE CHANGES – நாடகம்.

## மாறிடும் காலங்கள்.

### முதலாவது காட்சி

காலை நேரம்

மோகன் :-

என்ன இன்னும் ரியூசனுக்கு போகலையே கெதியாப் போ. முன்னுக்கு போனல்த்தான் முன்வாங்கில் இடம் பிடிக்கலாம். சயிக்கிளுக்கு காத்திருக்கோ? இல்லாட்டில் நான் டக்கெண்டு காத்தடிச்சுவிடுறன் முதல் முறையிலேயே மூன்று பாடத்திலும் A எடுத்து யூனிவேஸ்டிக்கு போகவேனும்.

மணிவண்ணன் :-

அப்பா அங்கை என்ன பள்ளிக்கூடத்தில் படிப்பிச் சதைத்தான் திருப்பி படிப்பிக்கினம் போர் அடிக்குது. இவை ஏதோ கீரோ மாதிரி சில பகுதிகளை படிக்க வேண்டாம் எண்டு சொல்லுகினம் இவையால் தான் யாழ்கல்வித்தரம் குறைந்தது.

மோகன் :-

இவைக்கு இரகசியமாய் சில தகவல் வருதாம் அதுதான் அப்படி சொல்லுறவை எண்டு எல்லாரும் கதைக் கினம்.

மணிவண்ணன் :-

அது பச்சை பொய்யப்பா அப்படி ஒரு நாளும் நடக்காது. இவை சொன்ன பகுதியில் போன முறை கேள்வி வரவில்லையாம். படிக்க வேண்டாம் எண்டு சொன்ன பகுதிகளிலை போன முறை கேள்வி வந்ததாம்.

மோகனா :-

இஞ்சாருங்கோ டக் கொண்டு ஒரு இறாத்தல் பாண் வாங்கியாருங்கோ. நான் சம்பல் இடிச்சுப் போட்டடன். இந்தாங்கோ பாக் தாறன். சொப்பிங் பாக்குக்குள்ளை பாணைப் போட்டுத்தந்தால் பாக் வேண்டாம் என்று சொல்லுங்கோ உந்த சொப்பிங் பாக்கை தாட்டால் உக்காது எரித்தால் ஒசோன் படலம் பழுதாகுது. சமூத்திக் கூட்டத்திலை இதைப்பற்றி ஒரு துண்டு பிரசுரம் தந்தவை.

மோகன் :-

ஒரு நாள் பயறு, கவுப்பீ எல்லாம் ஒவ்வொரு கிலோ வாங்கியந்தனான் ராத்திரி நனையப்போடேல்லேயே? மறந்து போனன் எண்டு சொல்லுவீர். இண்டைக்கு வேலைக்கு போற அந்த மாஸ்டர் வீட்டில் ரீவி பெட்டியை கழட்டி வைச்சிட்டினம். அவற்றை இரண்டு பிள்ளையளும் யூனிவேஸ்டிக்கு போன பிறகு தான் ரீ.வி பெட்டி திரும்ப செற் பண்ணுறது எண்டு சொல்லுறார் நீர் பகல்பகலாய் ரீவி சீரியல் பாக்கிறதிலை எல்லாம் மறந்து போறிர். எங்கடை இரண்டு பிள்ளையளும் உருப்பட்ட மாதிரித்தான். அவள் பவித்திரா பாவம் உம்மாலை லைபிரரிக்கு படிக்க போறாள்.

பவித்திரா :-

அப்பா! அம்மா ரீ.வி போடாட்டில் நான் இஞ்சையிருந்து படிக்கிறன். என்டாலும் உந்த வயிரவர்கோயில்ல பெரிய சத்தமாய் ஒலிபெருக்கி போடுகின்ற சத்தம் காதடைக்குது. உயர் நீதிமன்ற நீதிபதி உப்படி பெரிசா கோவிலில் ஒலிபெருக்கியில் பாட்டு போடவேண்டாமெண்டு சொல்லியிருக் கிறர். எங்கடை சனம் கேட்டால் தானே.

**மோனகா :-**

இஞ்சாருங்கோ நேற்று நீங்கள் தந்த 500 ரூபா முடிஞ்சு போச்சு காய் கறி ஒண்டும் இல்லை.

மோகன் :-

வாழைக்காயேல்லே முத்திப்போச்சு. நீர் வாழைக்காய் சாப்பிட்டால் அது வாயு எண்டு சொல்லுவீர். மரவள்ளி கிழங்கு முத்தியிருக்கும் நான் ஒரு தடி இழுக்கிறன் மிச்சமிருந்தால் ஆருக்கேன் கொடுக்கலாம். இந்த காலத்திலை உந்த காய்கறித்தோட்டங்களில் எவ்வளவு இராசாயனப்பசளை போடுகினம் உந்த காய் பிஞ்சுகளிளை கட்மியம் பொஸ்பேட் எண்டு ஒரு மூலக்கூறு இருக்குதாம் அது 0.003 வீதம் தான் அதிகமாய் இருக்கலாம் எண்டு உலக சுகாதார ஸ்தாபனம் சொல்லியிருக்கு. சந்தையில் வாங்கிவாற காய்கறியளில் ஒரு வீதத்துக்கு அதிகமாக அந்த கட்மியம் பொஸ்பேட் இருக்காம். 3-7–2016 சண்டே ஒப்சேவரிலை உதைப்பற்றி ஒரு கட்டுரை வந்திருக்காம். அந்த மாஸ்டர் சொன்னவர். மாஸ்டர் ஒரு பழைய சேட் எனக்கு தந்தவர். வேலை செய்யேக்கை போட்டுக்கொண்டு வேலை செய்யச் சொன்னவர். இந்த சூரிய ஒளி பட்டால் தோலில்

கான்சர் வருமாம். இந்த ஒசோன்படலத்திலே ஓட்டை வந்திட்டுதாம். இதுக்கு முந்தி பூமிக்கு மேலே 10 கீலேமீட்டர் இருக்கிற ஓசோன் படலம் சூரியனின் புறா ஊதாக் கதிர்கள் உடலில்படாமல் பாதுகாத்ததாம். இப்ப ஒசோன் படலத்திலே ஏற்பட்ட ஓட்டை வரவர பெரிதாகி வருகுதாம் இதைத்தடுக்க உலகத்தில உள்ள எல்லா நாடுகளும் ஒரு தீர்மானத்தில கைஒப்பம் போட்டிருக்கினமாம் சென்ற டிசெம்பர் மாதம் பிரான்ஸ் தலைநகரம் பரிசில் ஒரு சர்வதேச மகாநாடு நடந்தது அதுக்கு எங்கடை தற்போதைய ஜனாதிபதியும் போனவர். புதிது புதிதாய் பெரிய தொழிற்சாலைகள் உருவாகுது எல்லாரும் தனித்தனி வாகனங்களிலை மோட்டார்சைக்கிலிலும் வேலைக்கு போகினம் பொது போக்குவரத்து சாதனங்களில் அதுதான் பஸ் றயில் பிரயாணங்கள் செய்தால் எவ்வளவு நல்லது. வளிமாசுபடாது. காசு மிச்சம்.

முந்தி நாங்கள் பச்சை அரிசி நனைய விட்டு உரலில் போட்டு இடிச்சு அரிசிமா எடுத்தனாங்கள். இப்ப பக்கட் அரிசிமா வாங்கி வாறம் இதனால் மின்சார பாவனை அதிகமாக வருது. இதானால் எவ்வளவு வளி மாசடைகிறது.

சரி சரி பாட்டு பாடிக்கொண்டு பாண் வான் கிட்ட வந்திட்டுது பாண் வாங்கித்தாறன் இன்டைக்கும் மாஸ்டர் வீட்டைத்தான் வேலைக்கு போறன். போட்டு வாறன்.

## இரண்டாவது காட்சி

### மாலைநேரம் 6 மணி

மோகனா :-

உதென்னப்பா பழைய ஈசிச்சேயர் சைக்கிளில் கட்டிக் கொண்டு வாறியள? ஏன் கொத்தி எரிக்கவோ நான் வடிவான பச்சை நிறத்திலே ஒரு பிளாஸ்ரிக் ஈசிச்செயர் வாங்குவம் என்று நினைச்சனான்.

மோகன் :-

என்ன பிளாஸ்ரிக் கதிரையோ அது கெதியா உடைஞ்சு போம் உடைஞ்சால் ஒட்டிப்பாவிக்கேலாது வெட்டித்தாட்டாலும் உக்காது. பிளாஸ்டிக்கை எரித்தால் வளி மாசடைகின்றது சூழல் சுற்றாடலுக்கு கூடாது. மாஸ்ட்டற்றை தம்பி வெளிநாட்டில் இருந்து வாறாராம் அவர் ஆசையரய் இருக்க ஒரு ஈசிச்செயர் செய்யச் சொன்னவராம்.

பவித்திரா :-

அப்பா என்ன வெளிநாட்டுக்காறர் வருகினமெண்டு வீட்டுக்கு பெயின்ற் பூசினதே இண்டைக்கு செய்தவேலை? இண்டைக்கு மத்தியானம் மாஸ்ட்டர் வீட்டிலை ஒரு பெரிய வெட்டு வெட்டியிருப்பியல் என்ன இரண்டு காலோ நாலுகாலோ.

மோகனா :-

பவி, அது என்னடி இரண்டுகால்? நாலுகால்?

பவித்திரா :-

இரண்டுகால் எண்டால் கோழி. நாலு எண்டால் ஆடு, எல்லாம் தான்.

மோகன் :-

இண்டைக்கு எல்லாம் அவங்கட வீட்டுத்தோட்டத்தில் விளைந்த மரக்கறி தான் சமைத்தது. அவங்கட வீட்டு சமையல் அறை கழிவுகள் எல்லாம் கிடங்கு வெட்டி தாட்டனான் பழைய தயிர் மோர் எல்லாம் தண்ணீர்ல கரைத்து பயிர் உள்ள இடங்களில் தெளிச்சனான் இண்டைக்கு நாங்கள் பஞ்ச கௌவியம் தயாரித்தனாங்கள்.

பவித்திரா :-

பஞ்ச கௌவியமே அப்பா என்ன மாஸ்ட்டர் கோவில் எதாலும் கட்டி வைச்சிருக்கிறாரே.

மோகன் :-

மாஸ்ட்டர் வீட்டில் கோவில் இல்லை அவர் கோவிலடியிலை போகேக்கே ஒருக்கால் அதில் நிண்டு கும்புடுவர் அவ்வளவு தான் வடிவாய் தேவாரம் பாடுவர் நான் பஞ்ச கௌவியம் எண்டு சொல்லுறது அங்கை உள்ள பயிர்களுக்கு வீசுறதுக்கு தயாரித்த இயற்கை பசளை வீட்டுத்தோட்டம் பற்றி ஒரு சின்னபுத்தகம் தந்தவர் அதைவாசி நாங்களும் இனி எங்கடை தோட்டத்தை பெரிசாய் செய்வம்.

பவித்திரா :- வீட்டுத்தோட்டத்தின் நன்மைகள் பற்றி அந்த புத்தகத்தில் முதலாம் பக்கத்தல சொல்லியிருக்கு.

மோகனா :-

பவி வாசி எல்லாரும் கேட்பம் நானும் சமுர்த்திக் கூட்டத்தில் உதைச் சொல்லப் போறன்.

பவி :-

01. வீட்டை சுற்றியுள்ள முழு இடத்தையும் பயன்படுத்தல்.
02. சமச்சீர் உணவு பெறலாம்.
03. விருப்பமான பயிர்களை பயிரிடலாம்.
04. வீட்டு வருமானம் அதிகரிக்கும்.
05. மாசற்ற உணவு கிடைக்கும்.
06. பீடை நாசினியை குறைக்கலாம்.
07. கழிவு பொருட்கள் பசளையாகுகிறது.
08. அசேதன பசளை தேவை இல்லை.
09. சுற்றாடல் மாசடைவதை தடுக்கலாம்.
10. மண்வளம் பேணப்படும்.
11. தொடர்ச்சியாக உணவு பெறலாம்.
12. தேவையான போது அறுவடை செய்யலாம்.
13. வீட்டில் எல்லோருக்கும் உடற்பயிற்சி, மகிழ்ச்சி.

பவித்திரா :-

WANGARI MAATHAI வங்காரி மாத்தாய் –2004 உலக சமாதானப்பரிசு ஆபிரிக்காவை சேர்ந்த ஒரு பெண்ணுக்கு தான் கிடைத்தது. அது அவர் உலக சூழல் சுற்றாடல் பாதுகாப்பு இயக்கத்துடன் சேர்ந்து உழைத்ததற்காக கிடைத்தது. 1970களில் GREEN BELT என்ற இயக்கத்தை முதலில் ஆரம்பித்தரா். அதற்கு பிறகு உலக சுற்றாடல் பாதுகாப்புக்காக இயங்கும் பல அமைப்புக்களுடன் சேர்ந்து பாடுபட்டரா்.

ஏப்பிரல் முதலாம் திகதி 1940ல் பிறந்து அவர் 25 செப்டம்பா் 2011 காலமான பொழுது உலகமே அவருக்கு மரியாதை செலுத்தியது.

மோகன் :-

என்ன உரல் உலக்கை எல்லாம் கழுவி துடைச்சிருக்கு. இண்டைக்கு பச்சை அரிசி நனைய போட்டனிரே அப்ப உது இன்று இடிச்சு அரிச்சுத்தான் தான் இண்டைக்கு புட்டு அவிப்பீர் எவ்வளவு நல்லது மின்சாரம் மிச்சம் பைக்கற் மாவை வேண்டினால் எவ்வளவு நட்டம் அவங்கள் லாபம் வைச்சுத்தான் விப்பாங்கள். நாட்டில எவ்வளவு மின்சாரம் இருந்தும். மின்சார பாவனையை இரவில் குறைக்க சொல்லி அரசாங்கம் எவ்வளவு பிரச்சாரம் செய்யுது. பதிவச்ச மரவள்ளித்தடி தந்தவா் இண்டைக்கு நட்டு தண்ணீர் வாக்க வேணும் இனிமேல் எங்கட குசினி கழிவை கிடங்கு வெட்டி தாழ்ப்பம்.

மோகனா :-

அது தான் ஒரு பழமொழி இருக்கு

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர்”

பவித்திரா :-

அம்மா அது பழமொழியில்லை திருக்குறள் திரு வள்ளுவர் அருளியது பழமொழியெண்டால் பலகாலமாய் வளங்கிவரும் பல கருத்துள்ள நல்ல சொற்தொடர்கள் உதாரணமாய் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு –

“ஒன்று பட்டரல் உண்டுவாழ்வு.”

மணிவண்ணன் :-

நாள் ஒரு புதுமொழி சொல்லட்டே அன்னையும் பிதாவும் பின்னடிக்கி இடைஞ்சல். (எல்லோரும் வாய்விட்டு சிரிக்கிறரர்கள்)

பவித்திரா :-

இடிச்சதை எடுத்து அரியுங்கோம்மா நான் இடிக்கிறன்.

மோகனா :-

கவனம் மாறி உரல் விளிம்பில் இடிச்சு விட்டுடாதை நான் நாலு வாழைப்பழம் வாங்கின னான் அதில் பொட்டாசியம் இருக்காம் அதில் உடம்புக்கு தேவையான சத்துக்கள் உள்ளதாம் எங்கடை வீட்டுக்கு வந்த மிட்வைப் சொன்னவ

மணிவண்ணன் :-

அப்பா க்யூபா தேசத்தில் வாழைப்பழத்தோலை கடதாசி தயாரிக்க பாவிக்கிறாங்களாம். எங்கட நாட்டில் பழைய பத்திரிகைகளை மீள் சுழற்சி செய்யினம் என்டாலும் பழைய கடதாசியால் பல இடங்களில் எரிக்கப்படுவதை நாங்கள் பாக்கிறோம். உவை எல்லாம் வருடா, வருடம் உலக வெப்பம் அதிகரித்து கொண்டு போவதை நாங்கள் பாக்கிறம். ஒரு வீதம் உலகவெப்பம் அதிகரித்தால் உலக உணவு உற்பத்தி 10% குறையுமெண்டு சொல்லுகினம் அம்மா. இதனால் உலகத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுமென்று சொல்லுகினம் கடதாசி கழிவு ஒயில் பொலித்தின் போன்ற பொருட்களை நாங்கள் வீசி எறியிறோம் இதனால் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகுது. உலகத்திலே கழிவுப்பொருட்களை கடலில் வீசி எறியும் ஐந்தாவது நாடாக எமது நாடு இருக்கம்மா. கடந்த ஐம்பது வருடங்களில் கடல் வாழ் உயிரினங்கள் 90% அழிக்கப்பட்டிருக்கு. அதாவது சுற்றாடல் பாதிப்பால் உயிரினங்கள் இறந்து போய் விட்டது. அதில் உணவுக்காக பிடிக்கப்பட்ட மீன் தொகையும் இருக்கு.

மோகன் :-

அதனால்தான் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மன்னார் குடாக்கடலிலே மீன் பிடிப்பதை தடை செய்கின்றார்கள் அந்த காலம் தான் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலமாகும்.

பவித்திரா :-

அப்பாடா ஒரு மாதிரி அரிசி இடிச்சு முடிந்துது. சிலர் மத்தியானம் சமைத்த உணவைத்தான் இரவில் உண்ணுற

வையாம். நாங்களும் இனிமேல் அப்படிச் செய்வம் எவ்வளவு சக்தி வளம் மிச்சமாகும் காடளழிக்கிறதும் ஒரு பெரிய பிரச்சினையாகும் 1900ம் ஆண்டளவில் 75% காடாய் இருந்தது 1950ல் 50%மாக குறைஞ்சிட்டுதாம். 1980ல் 35% மாக குறைந்து விட்டதாம். 2000 ஆண்டுகளில் 25% மாக குறைஞ்சுகொண்டு போகுது. இப்படி காடழிச்சுக் கொண்டு போனால் நாட்டில் மழை வீழ்ச்சி குறையும் வெயிலும் வெப்பமும் தான் அதிகரிக்கும். அப்பா, நான் இண்டைக்கு லைபிரரிக்கு போனனான் அங்கை ஒரு சிறுகதைத் தொகுதியில் ஒரு சில சிறு கதைகளை வாசித்தனான். அது பிரான்ஸ் நகரத்தில் வசிக்கிற ஒரு யாழ்ப்பாணத்து மனிசன் எழுதிய கதைத் தொகுதி. அவர் ஒரு பிசியான றோட்டில் போகேக்கை ஒருதர் திருநீறும் பூசிக்கொண்டு, ஒரு நகைக்கடை விளம்பர நோட்டீஸ் கொடுத்துக் கொண்டு போனாராம். அவர் அந்த நகைக்கடை விளம்பர பனரை முதுகில் கட்டியிருந்தாராம் அப்ப இவர் உனக்கு வெட்கம் இல்லையா உது என்ன வேலை எனக் கேட்டராம். அதுக்கு அவர் கோட்டலிலை கோப்பை கழுவுவதைவிட அது நல்ல வேலை எண்டு சொன்னவராம் அந்த சிறு கதைக்கு அவர் கொடுத்த தலைப்பு சிலுவை சுமந்த சிவபெருமான்.

**மோகன் :-**

உதைத்தான் நிலவுக்கு பயந்து பரதேசம் போறது எண்டு சொல்லுறது சண்டை நடக்கேக்கை நாங்கள் ஒரு மாதிரி கூலி வேலை செய்து பிழைச்சனாங்கள்.

மோகனா :-

உப்பிடி யாழ்ப்பாணம் பஸ்ராண்டில முந்தி ஒருவர் விளம்பரம் சட்டை போட்டுக்கொண்டு சுபிப்ரிக்கட் வித்தவர் பழைய அரசியல்வாதிகளைப் பற்றி எல்லாம் சொல்லுவர் அவர் இப்ப செத்திருப்பார்.

மணிவண்ணன் :-

அப்பா நாங்கள் கொஞ்ச எ.ஏல் படிக்கிற பொடியள் சேர்ந்து சூழற்பாதுகாப்பு எண்டு ஒரு அமைப்பினை சேர்ந்திருக்கிறோம். இது ஐக்கிய நாடுகள் சபைக்கு, கிழே உலக சுற்றாடல் பாதுகாப்புக்கு என்ற தொனிப் பொருளில் உருவாக்கி இருக்கிறார்கள்.

நாங்கள் சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக துண்டுப்பிரசுரம் எல்லோருக்கும் கொடுத்து பிரச்சாரம் செய்யப்போறம். எல்லாரும் குப்பைகளை போட்டு எரிக்கினம் இதனால் அமில மழை பெய்ய இடமுண்டு குப்பைகளை கூட்டி கூடு அடைத்து பொலித்தீனால் மூடி சேதனப்பசளை தயாரிக்கலாம். நான் இண்டைக்கு ரீயூசன் போகும் பொழுது பிள்ளையார் கோவிலடியிலை சைக்கிலை நிற்பாட்டி போட்டு கும்பிட்டனான். அப்ப ஒருத்தர் தேங்காய்கோம்பை ஏற்றின லான்மாஸ்டர் நிற்பாட்டிப் போட்டு பிள்ளையாரை கும்பிட்டார். அந்த எஞ்சின் புகையால் வளி எவ்வளவு மாசடையும். அவருக்கு சொன்னனான் விளங்கேல்லை. நாங்கள் மாதர்சங்கங்கள், சனசமூக நிலையங்களில் கூட்டம் போட்டு இதைப் பற்றி பிரச்சாரம் செய்யப்போறம்.

மோகன் :-

உதொண்டும் வேண்டாம் தம்பி நீ கவனமாய்ப் படி உந்த வேலை பார்த்து உங்கடை படிப்பு கெட்டுப்போம். உந்த ஊர் வேலை பார்த்து உனக்கு யாரேன் சம்பளம் தரப்போகினமே?

மணிவண்ணன் :-

எந்த நேரமும் படிச்சி அலுத்து போச்சு சமூகசேவை செய்வதில்வாற நன்மைகள் பற்றி எங்கடை பாடசாலை அதிபர் அடிக்கடி சொல்லுறவர் பொது அறிவுப்பகுதியளிலில் இதுகளைப்பற்றி எல்லாம் இப்ப கேள்வி கேக்கினமப்பா யார் கண்டது வேலை தேடேக்கை இந்தப்பகுதியிலைதான் வேலை கிடைக்குதோ தெரியாது.

மோகனா :-

ஓம் நானும் சமூர்த்தி கூட்டத்தில் உதைப்பற்றி பிரச்சாரம் செய்யப்போறன் தம்பி எனக்கு கொஞ்ச துண்டுப்பிரசுரங்கள் தா. கூட்டத்திலை மற்றவங்களுக்கு நான் குடுக்கிறன்.

பவித்திரா :-

நானும் எங்கடை பாடசாலையில் படிக்கிற சிநேகிதிகள் எல்லாருக்கும் கொடுத்து பிரச்சாரம் செய்யப் போறன்.

மோகன் :-

சரி சரி மகாநாட்டை நிற்பாட்டி போட்டு புத்தகத்தை எடுத்து படியுங்கோ இரண்டு பேரும் இரண்டு அறையுக்கை இருந்து

படியாமல் விறந்தையில் இருந்து படியுங்கோ நாங்கள் வெளிவிறாந்தையிலை படுக்கிறம்.

மணிவண்ணன் :-

நான் வீட்டுவேலை எல்லாம் உடனேயே செய்து போட்டன் வகுப்பிலை கேக்கிற கேள்விக்கெல்லாம் நான்தான் முதலிலை மறு மொழி சொல்லுறனான் இப்ப மாஸ்டர் மார் என்னை பதில் சொல்ல வேண்டாம் மெண்டு சொல்லிப்போட்டினம்.

மோகன் :-

நீ ஏன்ர பிள்ளை அல்லவா?

மோகனா :-

ஏன் அவன் என்னர பிள்ளை இல்லையா?

பவித்திரா :-

அப்ப நான் ஆற்ரை பிள்ளை?

மோகனா :-

நீ என்ர பிள்ளை வந்து தேங்காயை திருவு.

பவித்திரா :-

தோங்காய் பூ கனக்க போடதையுங்கோ இரத்தத்தில் கொலஸ்ரோல் வந்திடுமாம். நான் முருக்கம் இலை ஆய்ஞ்சு வாறன் அதிலையும் போடுவம்.

மோகன் :-

அப்பா, நாங்கள் எல்லாம் 100வயது வாழப்போறம் பூமி தாங்காது. சனத்தொகைப் பெருக்கமும் ஒரு பெரிய பிரச்சினை எண்டு ரேடியோவில சொல்லுறாங்கள்.

பவித்திரா :-

அப்பா ஒரு பழந்தமிழ் பாட்டு ஒண்டு இருக்கு.
யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே மின்னொடு
வானம் தண்டுளி தலை இயானாது
கல்பொருது இரங்கும் அல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

(புறம். 192: 1-9)

மோகனா :-

இண்டைக்கு போயாவெல்லே முத்தத்தில் இருந்து சாப்பிடுவம்.

பவித்திரா :-

ஓ அம்புலி மாமாவை காட்டித்தானே எனக்கு நீங்கள் சின்னனில சோறு தீத்தின நீங்கள்

நிலா நிலா ஓடி வா

நில்லாமல் ஓடி வா

மல்லிகைப் பூ கொண்டுவா

மலை மீது ஏறிவா

எல்லோரும் சிரிக்கிறார்கள்.

## மூன்றாவது காட்சி அடுத்த நாள் காலை 8 மணி

பவித்திரா :-

அம்மா, அப்பா கொண்டந்த வீட்டுதோட்டம் பற்றிய யாழ் விவசாய திணைக்களத்தின்ரை கையேட்டில 45 நாட்களில் பயன் தாற காய்கறி பற்றிய ஒரு விபரத் துண்டு இது. நீங்கள் சமுர்த்தி கூட்டத்துக்கு போகேக்கை அங்கே விசாரிச்சு வாங்கியாங்கோ.

மேகனா :-

ஏன் கமத்தொழில் சேவை நிலையத்தில் ஒரு விவாசாய உத்தியோகத்தர் இருக்கிறார் அவர் எல்லா உதவியும் செய்வார்.

பவித்திரா :-

அப்ப இண்டைக்கு நான் தான் தனிய வீட்டில இருக்கப் போறன். போன முறை நீங்கள் என்னை வீட்டில விட்டிட்டு போக பக்கத்து வீட்டிலை நல்ல கூத்து லீசிங்கில வேண்டிய பெரிய அலுமாரிக்கு கட்டுகாசு கட்டேயில்லை யெண்டு அந்த கொம்பணிகாரர் வந்து கரைச்சல் குடுத்தவங்கள். எங்கடை வீட்டை வந்து குடிக்க தண்ணி கேட்டவை நான் குடுக்கேல்ல. ஏன்தான் தவணை விடுதலை விடுறங்களோ தெரியல்லை பள்ளிக்கூடம் போனால் நல்லாய் விளையாடலாம். பல நல்ல விடயங்களை கதைக்கலாம்.

மோகனா :-

நான் விசாரிச்சனான் அவை அதுக்கு பிறகு எல்லா காசும் கட்டிப்போட்டினமாம். சரி நான் இண்டைக்கு பயறு அவிச்சனான்

தாளிக்கலாம் எண்டால் தேங்காண்ணை இல்லை அப்பா தாற காசு காணாது நான் என்ன செய்யிறது.

மோகன் :-

விடியப்புறம் மாஸ்ட்டர் வந்து சொல்லிப்போட்டு போனவர். இண்டைக்கு வேலைக்கு வரவேண்டாமாம். பக்கத்து வீட்டிலை ஆரோ கிழவி செத்துப் போச்சாம் இண்டைக்கு இவைதான் மத்தியான சாப்பாடு குடுக்கிறதாம். பக்கத்தில் செத்த வீடு நாங்கள் தோட்ட வேலை செய்யிறது அழகில்லையெண்டு சொன்னவர். நான் இண்டைக்கு விறகு காலைக்கு விறகு கொத்தப் போறன். மத்தியான சாப்பாடு அகினேக்கை பாக்கிறன் இரண்டு தூக்கு விறகு கொத்தினால் 500 ரூபாய் கிடைக்கும். ஆரேன் செத்தால் எரிக்கிறதுக்கு விறகு ஏத்த வருவினம் விறகு ஏத்தினால் 100, 200 ரூபாய் தருவினம் வெளிநாட்டுகாரர் எண்டால் பாத்து பாக்காமல் காசு தருவினம்.

காட்சி முடிந்தது

## நான்காவது காட்சி மாலை ஆறு மணி

மோகனா :-

என்னப்பா நொண்டிக்கொண்டு வாறியள் என்ன நடந்தது.

மோகன் :-

ரைக்ரர்லை சுடலைக்கு விறகு ஏத்தேக்கை பெரிய ஒரு கட்டை சறுக்கி வீழ்ந்து போச்சு விழேக்கை காலிலை விழுந்துட்டுது சரியாய் நோகுது இரண்டு பனடோலும் தண்ணியும் கொண்டு வா எல்லாம் சரியாய் போகும்.

மோகனா :-

ஐயோ கடவுளே!

இனி சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது. சங்கிலி அடகு வச்சுத்தான் காக்குசு கட்டினனாங்கள் அதை திருப்பி எடுக்கவேணும்.

மணிவண்ணன் :-

அப்பா, நீங்கள் இனிமேல் வேலைக்கு போக வேண்டாம் எ.ஏல் சோதினை முடியுது. நான் எங்காலும் கடையிலை போய் வேலை செய்யப்போறன்.

மோகனா :-

(அழுதபடி) ஐயோ! நல்லூர் முருகனே என்ரை பிள்ளை நீ பல்கலைக்கழகத்தில் படித்து பெரிய உத்தியோகம் பார்க்க வேணுமெண்டு கனவு கண்டனான். இப்பிடியாய்ப் போச்சே நான் ஓ.எல் எல்லா பாடமும் பாஸ் எடுத்தனான். நாட்டு பிரச்சினை யாலை எ.ஏல் படிக்கேலை உனக்கும் இப்பிடியாய் போச்சு.

மணிவண்ணன் :-

நான் வேலை செய்து கொண்டே வெளிவாரியாய் படிப்பன். வெளிவாரியாய் படிச்சவை எல்லாம் எத்தினையோ பேர் பல்கலைக்கழக பேராசிரியராய் வந்திருக்கினம். இப்ப ஒன் லையினில் படிக்கலாம். இப்படியே எத்தினையோ வழி இருக்கு அமெரிக்க சனாதிபதி ஒபாமாவின் மகள் விடுமுறை காலத்தில ஒரு கடையிலை வேலை செய்யிறா எண்டு பத்திரிகை செய்தி வந்திருக்கு.

பவித்திரா :-

ஓம் அம்மா அவவுக்கு பாதுகாப்புக்காக மூன்று பாதுகாப்பு அதிகாரியளை போட்டிருக்காம். (எல்லாரும் சிரிக்கிறார்கள்) துன்பத்திலும் இன்பம் காண்பது நம் தமிழர் மரபு.

மணிவண்ணன் :-

“இடுக்கண் வரும் கால் நகுக” என்றும் கூறுவார்கள்.

மோகனா :-

அப்ப அப்பா, கொஞ்ச நாளைக்கு வீட்டிலே இருக்கட்டும். நல்லூர் முருகன் கோயில் கொடியேறியிட்டுது வெளிநாட்டுகாரர் வந்து வீடுகளிலை நிக்கினமாம் சமைக்க ஆள் தேவை எண்ட வையாம் நான் மத்தியான சமையலுக்கு போறன் பாத்து பாராமல் தருவினம் வரரேக்கை நான் என்ரை சாப்பாட்டை பாசலாய கட்டி வருவன்.

பவித்திரா :-

ஓம் அம்மா கனகறி சமைப்பின மெல்லே அப்பளம், மிளாகாய் பொரியல், வடகம் எல்லாம் இருக்கும் நாங்களும் அரிசிசையை போட்டு வடிச்சால் அந்த பாசலை பிரித்து சாப்பிடலாம். போன முறை கடசியாய் போகேக்கைக்கு பழம் உடுப்பெல்லாம் தந்திட்டு போனவை எல்லே?

மோகனா :-

ஓம் அப்படிதந்த சாறிதான் இண்டைக்கு சமூத்தி கூட்டத்துக்கு போகேக்கை கட்டினான்.

# ஐந்தாவது காட்சி

## 50து நாட்கள் சென்றன ஒரு காலை நேரம்

இவர்களின் காய்கறித்தோட்டம் நன்றாக வளர்ச்சியடைந்தது.

மணிவண்ணன் :-

அப்பா எ.ஏல் மறு மொழி வந்திட்டுது எனக்கு மகாபொல கிடைக்கும் எங்களட பாடசாலை மட்டத்திலை எனக்குத்தான் ஆகக்கூடிய புள்ளிகள் கனடா பழைய மாணவர் சங்கம் மாதம் பத்தாயிரம் தருவினமாம் படிப்பு முடியுமட்டும் தருவினமாம்.

பவித்திரா :-

ஓம் அப்பா எங்கட பள்ளிக் கூடத்திலையும் 3 அக்காமருக்கு உப்பிடி வெளிநாட்டு மாணவர் சங்கம் கொடுத்து உதவி செய்யினம்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்

தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்"

என்ற குறளை பவித்திரா சொல்ல எல்லோர் கண்ணிலும் ஆனந்த கண்ணீர்.

மணிவண்ணன் :-

அப்பா, கம்பஸ் துவங்க ஒரு வருடத்துக்கு மேலே காலம் போகும் என்னை ஒரு தனியார்கல்வி நிலயத்திலை படிப்பிக்க கேட்டவை.

மோகனா :-

பவி, நாங்கள் எல்லாரும் நல்லூர் முருகன் கோவிலிலை மஞ்சம் திருவிழா போய் முருகனை கும்பிட்டுட்டு வருவம் நீ நல்லாய் படி.

மணிவண்ணன் :-

அப்பா நான் இன்டைக்கு வடம் பிடித்து மஞ்சத்திலை முருகனை கோயில வலம் வாறதிலை பங்கேற்க வேணும்.

மோகனா :-

சேட் போடேலாது தெரியும் தானே 7 மணிக்கு வீட்டுக்கு வந்திட வேணும்.

# ஆறாவது காட்சி இரவு 8 மணி

பவித்திரா :-

அப்பா நீங்கள் எல்லாரும் கோவில் கும்பிட்ட பலன் ஒண்டு கிடைத்திருக்கு ஒரு நல்ல செய்தி G.S வந்து சொல்லிப் போட்டு போனவர். யாழ் குடா நாட்டிலை எங்கடை வீட்டுத்தோட்டம் தான் சிறந்தது எண்டு தெரிவாகியிருக்கு அதுக்கு பல பரிசுகள் கிடைக்குமாம். இன்னும் பலர் எங்கடை வீட்டுத்தோட்டத்தை பாக்க வருவினம் எண்டு சொன்னவர்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு" எல்லாரும் சோர்ந்து பாடத்தொடங்கிறார்கள்.

நாடகத்தின் முதலில் எல்லோரும் சேர்ந்து பாடும் பாட்டு.

தோட்டம் செய்வோம்.

வீட்டுத் தோட்டம் செய்திடுவோம்.

வேண்டாம் வேண்டாம் செயற்கை பசளை, இயற்கை பசளை துவிடுவோம்.

சேதன பசளை செய்திடுவோம்.

வேண்டாம், வேண்டாம் பூச்சி கொல்லிகள் இயற்கை பூச்சி கொல்லி செய்திடுவோம்.

போவோம் போவோம் விவசாய போதனாசிரியரிடம் கேட்போம் வழிமுறைகள்.எங்கள் காய்கறிகள் நாங்கள். பயிரிடுவோம்.

எங்கள் கீரைகள்,

எங்கள் மரவள்ளி
பல்லரண்டு மரம் நடுவோம்

புதிய புதிய இனங்கள் தென்னை பயிரிடுவோம், தேக்கு மரம் நடுவோம்.

குசினி கழிவுகளை வெட்டி தாழ்ப்போம்.

மாட்டோம் மாட்டோம் எரிக்க மாட்டோம் குப்பை கஞ்சல்கள் சருகுகள்.

நடந்து செல்வோம் சைக்கிலில் செல்வோம், பஸ்லில் செல்வோம், ரெயினில் செல்வோம் இன்று செல்வோம்.

அப்பா சூழல் பாதுகாப்பு விடயமாக குழே ஒவ்வொரு வருடமும் ஒரு தொனிப்பொருளில் ஒரு திட்டத்தை அல்லது கோசத்தை முன் வைக்கிறார்கள். இந்த வருடம் 2016ல் Go WILD FOR LIFE என்பது தான் கோசம் அந்த தலைப்பில் ஒரு கவிதை எழுதினேன் படிக்கிறேன்.

வானந்திரம் செல்வோம்

வனம் வளர்த்து வாழ்வோம்.

பயிர் இல்லா இடத்தில்

உயர் வாழ்வு தொடங்குவோம்

நிரையாக மரம் வளர்ப்போம்

நிறை வான பல தந்திடும்

*********

இந்த ஆண்டில்

இந்த சுலோகம்

எந்த இடத்துக்கும் பொருந்தும்

சிந்திப்போம் சுற்றாடல் மேம்படுத்துவோம்.

*********

வளியை சுத்தமாக்கும்

ஒளியை குளிரவைக்கும்

களிப்பாய் வாழ்ந்திடலாம்

செழிப்பாய் வளரும் மரங்களினால்

*********

தியோர் தொடர்பு இல்லையே

சேயோர் நன்று விளையாடலாம்

தாயோ அக மகிழ்ந்திடுவாள்

மேலாய் எங்கள் வாழ்வும் வளமும் வளர்ந்திடுமே.

*********

மோகன் :- பவித்திரா உனக்கு கிளிநோச்சியிலை ஒரு காணி வாங்கி வீடு கட்டி தாறன்.

பவித்திரா :- அப்பா நான் A/L படித்து முடித்தவுடன் வன்னி மாவட்டத்தில் போய் தொண்டு நிறுவனங்களோ செய்யப்போறன்.

மோகனா :- அப்ப நீ பல்கலைக்கழகம் போய் படிக்கவில்லையா?

பவித்திரா :- என்னம்மா முதியோர்கல்வி மாதிரி பலர் நெடுக படிக்கினம் பல பட்டங்கள் பெறுகினம் இவையளால் நாட்டுக்கு என்ன நன்மை தான் கொஞ்சம் படித்து கனக்க சேவை செய்யப் போறன்.

இன்னும் ஒரு கவிதை படிக்கிறன் கேளுங்கோ

<u>ஓசோன் படலத்திலே ஓட்டை</u>

ஓசோன் படலத்திலே ஓட்டை

ஒளிதரும் சூரிய கதிர்கள் (4ஏ)

ஓசைப் படமால் நடக்கும் அவலம்

உங்கள் தோலுக்கு ஆபத்து

தோலில் புற்று நோய் வரும்.

தோன்றிடும் கண்புரைசல் நோய் (CATRACT)

தொப்பி அணிந்து செல்லுாங்கள்

தொந்தரவு பல தவிர்த்திடலாம்.

******

எரிமலை வாயுக்கள்

எயர் கொண்டிசன் வாயுக்கள்

குளிர் சாதனவாயுக்கள்

வெளியாகும் செயற்கை நறுமணவாசனைகள்

நன்றாய் வாழ்வோம்.

நன்று வாழ்வோம்.

அப்பா 1972ல் ONLY – ONE – EARTH.

இருந்து ஒரு பூமி தான் என்ற கருப் பொருளை முன் வைத்தார்கள்.

ஒரே வானம்

ஒரே பூமித்தாய்

மண்ணிலே போர் வேண்டாம்

கற்க கசடு அற கற்போம்.

*********

போரிலே பாரிய ஆயுதங்கள்
பீறிவரும் வாயுக்கள்
பெருகிடும் உற்பத்தி செலவு
கூறுவோம் அதன் வளிதாக்கம்.

*************

உக்காத பொருட்களை உயர்த்தி வைப்போம்
உக்கும் தளைகளை பசளை ஆக்குவோம்.
உருவாக்குவோம் பல்லாண்டு மரங்கள்
உருவாகும் நல்ல பூமி நமதே

*************

எழுபத்திரண்டில் கோசம் இது
பழுதில்லாமல் பயில்வோம்
பல பல மரம் நடுவோம்
நிலவிலே பேசுவோம்.

அப்பா 1983 இல் உலக சமாதானத்திற்காக ஒரு மரம் நடுவோம் என்பதுதான் UNO வின் கோசம் அல்லது பிரகடனம்

இதுதான் கவிதை

83 இன் பிரகடனம்

என்றும் தொடரும் கதை

உண்பவை தரும் மரங்கள்

நன்பகலிலே குளிர்ச்சி தரும் ……

நைரோபி கென்யாவில் நிகழ்வு

நன்றாய் 500 பேருக்கு பரிசில்கள்

நல்ல சூழல் ஆர்வலர்கள்

நல்ல பலன் பெற்றார்கள்

பிரேசில் நகர் றியோவில்

பிரயோசனம் தந்த தீர்மானம்

பிரபல்யமான பூமி மகாநாடு

பிரயோக நிலையான அபிவிருத்தி

பலநாட்டு குழுக்கள்

எல்லாரும் பேசிய களம்

பல்லவர் காலத்தில் விவசாயம்

எல்லா தேசமும் உயர்ந்திடுமே

அப்பா உயிர் பல்வகைமை ( BIO ) Diversity என்ற ஒரு முக்கிய விடயம் !

நாங்கள் பல உயிர்கள் பல தாவரங்கள் என்று நினைக்கின்றோம் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று தொடர்பானவை இதுதான் உயிர்

பல்வகைமை என்று கூறுவார்கள். 1992இல் UNO வின் பிரகடனம் இதுதான்

உலகத்தில் உன்னத நிகழ்வு
உயிர் பல்வகைமை ஒப்பந்தம்
பயிர் பலவற்றின் தொடர்ச்சி
உயிர்களின் தொடர்ச்சியை பாதுகாப்போம்

************

மண்ணுக்கு மரம் பாரமா
மண்ணுக்கு அது பாதுகாப்பு
விண்ணைத்தொடும் சோதனைகள்
மண்ணின் மைந்தர்கள் செய்தனர்

************

பாம்புப்புத்துக்குள் பாம்பு
வீம்பாய் பாம்பைக் கொல்லாதே
தீங்கில்லா அகிளான்கள்
மண்ணின் கீழே
மங்காமல் ஏறும் கறையான் இனம்

************

எதிர்கால மனித உணவுகள்
அதிகமாக ஆழ்கடல் பரப்பில்தான்
பதிலாக பல இனம் அழியும் ஆபத்து
மதுரமாய் காப்போம் கடல் அன்னை தனை

2003 இல் கோசம் **(Bio Diversity )**

<u>நிலையான அபிவிருத்தி</u>

நிலைக்கும் மாந்தர் வாழ்வு சிறக்க

பலமாகிய கூறிய ஆண்டு

நலமாய் நாமும் செயற்படுவோம்.

மாட்டுப்பால் குடித்திடுவோம்

***********

மாப்பால் இனி வேண்டாம்

தோட்டத்திலே கன்றுக்குட்டி

மட்டில்லா மகிழ்ச்சி நமக்கு

வறுமை மாந்தர் குறையட்டும்

***********

பெருமை கல்வி வளரட்டும்

சிறுமை மனிதர் செயல் வேண்டாம்

பெருகட்டும் குடிசை கைத்தொழில்கள்

எமது காய்கறி உணவுகள்

எமது பாசிப்பயறு

எமது பொருட்கள் கடைகளிலே

பொதுவாய் பெருகட்டும்

எமது பிரதேசத்தில்

************

உழுதுண்டு வாழ்வோம்

பொழுது விடியட்டும்

செழுமையான விவசாயம்

பழகுவோம் எல்லோரும்

2004இல் கோசம்

**(Bio Diversity )**

<u>குடிநீரைப்பாதுகாப்போம்</u>

இடித்து உரைப்போம் கெடுதல்கள்

பிடித்து சேமிப்போம் மழை நீர்

தடித்த பெரிய தொட்டி கட்டுவோம்.

சத்துள்ள உணவு சாப்பிடுவோம்

சத்தான அரிசி நஞ்சல்லாதது

சத்துக்கெட்ட வெள்ளை மா வேண்டாம்.

புத்துலகம் படைப்போம் உணவிலே

உடல் நலம் பேணுவோம்

தொற்ற நோய்கள் தவிர்த்திடுவோம்

சடலமான மிருக உணவு வேண்டாம்

மடமை மாந்தருக்கு வழிகாட்டுவோம்.

2005இல் கோசம் ஆயுள் பாதுகாப்பு ஆண்டு

ஆயுள் பாதுகாப்பு ஆண்டு ஆயுள் பாதுகாப்பு என்பது

பாயில் படுக்கும்போது உதவும்

ஆஸ்பத்திரிச் செலவு

கூசாமல் தந்திடும் திட்டம்

ஆயுள் அழிக்கும் விபத்துக்கள்

ஆள் முடிந்து விட்டால்

நாளை மனைவி பிள்ளைகள்

நல்லாய் முன்னேற உதவும்

அப்பப்போது போனஸ் தொகை

செப்பமாய் சேர்ந்திடம் முதலோடு

பௌவியமாய் பரப்பிடுவோம்

இத்திட்டத்தை

செப்பமாய் முதலிடும் திட்டம்

திரழும் பணத்தால் நாட்டுக்கு நன்மை

புரழும் பங்குச்சந்தை உயர்ந்திடும்

நாழும் பொழுதும் வளர்ந்திடும்

நமது நாட்டுக் காப்புறுதி

2006இன் தீர்மானம்

வரண்ட பிரதேசத்தின் வளங்களை

சுரண்டாமல் நன்று வளர்ப்போமா

வரண்ட நிலத்து தாவரங்கள்

திறம்பட பாதுகாத்திடுவோம்

ஓங்கி வளரட்டும் செவுக்கு மரம்

எங்கும் வளரட்டும் பற்றைக்காடுகள்

எங்கும் தெரியும் கண்டல் தாவரங்கள்

சங்கமிக்கும் கடற்கரையை அழகாக்குவோம்.

எங்கும் நகரும் ஆமையினம்

ஓங்கி வளரும் மணல் தரையில்

சங்கமிக்கும் கடற்கரையில்

மங்கியதோர் நிலவினிலே

நடப்போம் நாங்கள்

## 2006இல் (Climate Changes ) காலநிலை மாற்றம்

சடுதியாய் மாறும் காலநிலை

சடுதியாய் பெரிய வெள்ளம்

கெடுதியான பெரிய வரட்சி

கெடுதி செய்தது நாங்களே

அழித்தோம் இயற்கை வளத்தை

குழி விழுந்தது ஓசோன் படலத்திலே

குழி பெருக்காமல் பார்த்திடுவோம்

பழி பாவம் நமது சந்ததிக்கே

நீர் வளத்தை பாதுகாப்போம்

நீர் சொட்டும் பாசனம்

பார் புகழும் விவசாயம்

யாரும் புகழ்வார்

இயற்கை விவசாயத்தை

***********

ஆலைப்பொருட்கள் வேண்டாம்

நாளைமுதல் சிறு தொழில்கள்

காளை மாட்டு எருக்கள்

நாளை நன்று வளந்திடுமே

## அதிகளவு பழம் வேண்டுமா

நிழல் தரும் கொப்புகளை வெட்டுங்கள்

பழ மரத்தை கத்தரியுங்கள்

நல்ல இடைவெளிவேண்டும்

நல்ல சூரிய ஒளி கிடைக்கட்டும்.

தேவையற்ற கிளைகளை அகற்றுங்கள்

பாவமாய் நோய் பிடித்தமை

அளவான நீர்ப்பாசனம்

பாளாய்ப்போன பூச்சிகளை

கட்டுப்படுத்துங்கள்

தேனி வளர்த்தல் நன்று

தேனீ கூடு வையுங்கள்

தானாய் தொடரும் மகரந்தச் சேர்க்கை

கானம் பாடும் பூச்சிகள்

வல்லாரை

இரத்த ஓட்டம் சீராகும்

பத்தியமாய் கால் வீக்கம் குறையும்

நித்திய உணவு புண்களை ஆற்றும்

சுத்தமாய் குறைக்கும் கொழுப்பை

பல்துலக்கலாம் வல்லாரை இலையால்

நல்ல வெள்ளையாய் வந்திடும் பற்கள்

நல்ல சாறு எடுத்து உண்ணுங்கள்

நல்ல தேன் கலந்திட

ஞாபக சக்தி வளரும்

துணியில் கட்டி சூடான ஒத்தனம்

மனிதனின் வலி பறந்திடும்

மனித மாரடைப்பு தவிர்த்திடலாம்

கணிசமாய் எண்ணெய் சேர்த்திட்டால்

உடல் சூடுகுறையும்

அதிகாலையில் நான்கு இலைகள்

மதியாய் மறையும் மனநோய்கள்

கதியாய் சிறுவர் உணவில் சேருங்கள்

சுதியாய் இருக்கும் சூப்பில் சேர்த்தால்

## மாதுளம் பழம் வேண்டுமா

பதிவைத்த கண்டை வாங்குவோம்

பொதுவான தயாரிப்பு நிலம்

மெதுவாய் விடுவோம் தண்ணீரை

எமது சேதனப்பசளை போடுவோம்.

மூன்று மாதத்தில் பூக்கும்

நன்றாய் கிள்ளி எறிந்திடுவோம்

கன்று வயதில் காய் வேண்டாம்

நன்றாய் வளரட்டும் ஒரு வருடம்

10 வருடத்தில் 150 காய்கள்

மொத்தமாய் ஒரு வருடத்தில் கிடைக்கும்

சத்தான பழம் உண்போமா?

மொத்தமாய் உயரும்

இரத்தத்தில் நன்மைகள்.

# கொட்டும் குளவிகளை காப்போம்.

கொட்டும் குளவிகளை காப்போம்.

கட்டுப்பாடு இல்லாமல் பறக்கும் காலம்.

நடமாடும் மாதங்கள் யூலை முதல் ஒக்டோபர் வரை

திடமான கூடுகள் அமைக்கும் காலம் இது

*********

பரபரப்பாக பறக்கும் காலம் இது

சிறப்பான உணவு தேடுதல்

திறமான கருவூட்டல் வேளையில்

பறந்து திரியும் தூரம் 500 மீற்றர் வரை

*********

கொடுக்குள் விசம் தயாராக இருக்கும்

படித்தவர்களின் ஆய்வுக்காலம் 60 வருடங்கள்

ஒடிக்காதிர் மரக்கிளைகளை

கடிதென பழங்களை பறிக்காதீர்

*********

வாசனைத்திரவிய பூச்சால் கவரப்படும்

வாசைன சுவாசித்து முடிந்த பின்பு

பூ சிறந்த மணங்களை நாடிவரும்

ராசியான தேன்குளவிகளை காப்போம்.

********

மணம் உள்ள பானாங்களை நாடிவரும்
குணமான வாசைன உணவுக்காக
மணமான வாசைன பூச்சுக்கள்
நிதனமான பல வழிமுறைகளை நாடிவரும்.

---

நாடகத்தின் முடிவில் எல்லோரும் சேர்ந்து பாடுகிறார்கள்.

பிந்தி வந்தோரே

நாடகத்திற்கு பிந்திவந்தோரே

வாழ்க்கையில் முந்துங்கள்

முன்னோறுங்கள்

முற்போக்கு சிந்தனைகளை ஏற்போம்

திசை எட்டும் செல்வோம்

நிலையான அபிவிருத்தியில் நிலைக்கும்

சிறக்கும் மனித வாழ்வு.

## ஆசிரியரின் பிற நூல்கள்.

ஆங்கில மொழி நூல்கள்.

1. UNITY (SHORT STORY COLLECTIONS)
   I SBN 978 – 955 - 1317 -08 - 9.
2. POEMS ON GENIUS PEOPLE.
3. SOCRATES AND HISS FOLLOWERS
   I SBN 978 – 955 – 51385 - 0 -5.
4. FAMOUS PHILOSOPHERS OF THE IVORLD
   I SBN 978 - 955- 51477-0-5

ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள்.

1. ரேமியோ ஜீலிலட் (சேக்ஸ்பியா I SBN –978–9555- 1477-3-6)
2. சேக்ஸ்பியர் கவிதைகள்.
3. I SBN 978-955-51477-4-3 NURSERY RHYMES.
4. கார்ஸ் மாக்ஸ் எழுதிய கவிதைகள்
   I SBN 978-955-51477-6-7

❖ ஆங்கில நூல்கள் தேசிய நூலக சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டது.

## தமிழ் நூல்கள்

1. செந்தமிழ் நாடென்னும் போதினிலே (சிறு கதைத்தொகுதி)
2. சீனாவும் இலங்கையும்

   I SBN 978-955-51477-1-2
3. உலகப்புகழ் பெற்ற அமைப்புக்கள்

   I SBN -978-955-51385-3-6.
4. உலகமயமாகல் கவிதைக் தொகுதி

   I SBN – 978-955-51477-2-9
5. தேர்தலும் அரசியலும்

   I SBN-978-955-51385-2-9
6. தமிழ் வளர்த்த நான்கு தமிழ் பேராசிரியர்கள்

- தேர்தலும் அரசியலும் என்ற நூல் பாடசாலை நூலகங்களிலும் பொது நூலகங்களிலும் இருப்பதற்கு தகுதியுள்ளது நூல் என்ற சான்றிதழை கொழும்பு கல்வி திணைக்கழகம் வழங்கியுள்ளது.

- ISBN குறியூடு உள்ள தமிழ், தமிழ் மொழி பெயர்ப்பு நூல்களும் கொழும்பு இந்து சமயதிணைக் கழகத்தினால் கொள்வளவு செய்யப்பட்டது.

எமது நூல்களை பெற்றுக்

கொள்ளக்கூடிய இடங்கள்

1) புத்தகக்கூடம் .பரேமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி திருநெல்வேலி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில்
2) அன்னை புத்தகசாலை நவீன சந்தை யாழ்ப்பாணம்
3) யாழ் புத்தகசாலை, யாழ்ப்பணம் போதனாவைத்தியசாலைக்கு பின்புறமாக

ISBN

978 – 955 – 51477 – 8 – 1